இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

பாராளுமன்றம்

---

# 1984 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) (திருத்தச்) சட்டம்

---

*[1984, ஜூன் மாதம் 20 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1984, ஜூன் மாதம் 22 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 60 தபாற் செலவு : சதம் 60

1984 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) (திருத்தச்) சட்டம்

[1984, ஜூன் மாதம் 20 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

சஃவ.—ஓ. 57/85
1619

## பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1984 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

383 ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

2. பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் 19 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகிறது :—

'பாராளுமன்றத்தினது அதிகாரத்தின் கீழ் வெளியிடப்பட்ட அறிக்கைகள் முதலியனவற்றை வெளியிடுவதற்கும் அத்துடன் அவற்றின் பிரதிகளை அல்லது அவற்றிலிருந்து பிரித்தெடுத்த பகுதிகளை வெளியிடுவதற்குமான பாதுகாப்பு.

19. (1) (அ) பாராளுமன்றத்தின் அல்லது அதன் ஏதேனும் குழுவின் கட்டளைப்படி அல்லது அதிகாரத்தின்கீழ் வெளியிடப்பட்ட அறிக்கை, பத்திரம், நிகழ்ச்சிக் குறிப்பு, தீர்மானம் அல்லது நடவடிக்கை ஒன்றாக இருக்கும் ஏதேனும் அறிக்கையை, பத்திரத்தை, நிகழ்ச்சிக் குறிப்பை, தீர்மானத்தை அல்லது நடவடிக்கைகளை ; அல்லது

(ஆ) ஏதேனும் அத்தகைய அறிக்கையின், பத்திரத்தின், நிகழ்ச்சிக் குறிப்பின், தீர்மானத்தின் அல்லது நடவடிக்கைகளின் பிரதியொன்றினை,

எவரேனும் ஆள் அல்லது அவரது சேவையாளர் வெளியிட்டதற்காக அல்லது வெளியிட்ட காரணத்துக்காக அல்லது வெளியிட்டது தொடர்பாக தொடரப்பட்ட எவையேனும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளில் எதிராளியாக இருக்கும் அத்தகைய ஆள், தமது உளக் கருத்துப் பற்றி இருபத்து நான்கு மணிநேர அறிவித்தலை வழக்காளிக்கு அல்லது வழக்குத் தொடுநருக்குக் கொடுத்ததன் மேல்—

(i) பந்தி (அ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட வெளியீடு ஒன்று தொடர்பான எவையேனும் குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைகளின் விடயத்தில், அத்தகைய வழக்கு நடவடிக்கைகள் எந்த அறிக்கை, பத்திரம், நிகழ்ச்சிக் குறிப்பு, தீர்மானம் அல்லது நடவடிக்கைகள் தொடர்பாகத் தொடரப்பட்டனவோ அந்த

அறிக்கை, பத்திரம், நிகழ்ச்சிக் குறிப்பு, தீர்மானம் அல்லது நடவடிக்கைகள் பாராளுமன்றத்தினது அல்லது அதன் குழு எதனதும் கட்டளைப்படி அல்லது அதிகாரத்தின் கீழ் அத்தகைய ஆளினால் அல்லது அவரது சேவையாளரினால் வெளியிடப்பட்டதெனக் கூறும் சபாநாயகரின் அல்லது பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் கைப்பட்ட சான்றிதழ் ஒன்றினை அத்தகைய வழக்கு நடவடிக்கைகள் எந்த நீதிமன்றத்தில் நடாத்தப்படுகின்றனவோ அந்த நீதிமன்றத்தின் முன்னர் கொண்டுவரலாம்; அல்லது

(ii) பந்தி (ஆ) வில் குறிப்பிடு செய்யப்பட்ட வெளியீடு ஒன்று தொடர்பான எவையேனும் குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைகளின் விடயத்தில், அத்தகைய வழக்கு நடவடிக்கைகள் எந்தப் பிரதி தொடர்பாகத் தொடரப்பட்டனவோ அந்தப் பிரதியினையும் அத்துடன் அது எந்த அறிக்கையின், பத்திரத்தின், நிகழ்ச்சிக் குறிப்பின், தீர்மானத்தின் அல்லது நடவடிக்கைகளின் பிரதியொன்றெனக் கொள்ளப்படுகிறதோ அந்த அறிக்கையினை, பத்திரத்தினை, நிகழ்ச்சிக் குறிப்பினை, தீர்மானத்தினை, அல்லது நடவடிக்கைகளை, அத்தகைய அறிக்கையையும், பத்திரத்தையும், நிகழ்ச்சிக் குறிப்பையும், தீர்மானத்தையும் அல்லது நடவடிக்கைகளையும் அத்தகைய பிரதியின் சரியாந்தன்மையினையும் உறுதிப்படுத்தும் சத்தியக் கடதாசியொன்றுடன் சேர்த்து அத்தகைய வழக்கு நடவடிக்கைகள் எந்த நீதிமன்றத்தில் நடாத்தப்படுகின்றனவோ அந்த நீதிமன்றத்தின் முன்னர் வைக்கலாம்,

அத்துடன், அத்தகைய நீதிமன்றமானது அதன்மேல் உடனடியாக அத்தகைய குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளை நிறுத்திவைத்தல் வேண்டும் என்பதுடன், அதன்கண் வழங்கப்பட்டதான அதே மன்றுரை முதலியனவும் அத்துடன், ஒவ்வொரு மன்றுரையும் இறுதியாக முடிவுறுத்தப்பட்டனவாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) (அ) பாராளுமன்றத்தின் அல்லது அதன் ஏதேனும் குழுவின் கட்டளைப்படி அல்லது அதிகாரத்தின் கீழ் வெளியிடப்பட்ட அறிக்கை, பத்திரம், நிகழ்ச்சிக் குறிப்பு, தீர்மானம் அல்லது நடவடிக்கைகள், எதனிலுமிருந்து பெற்ற பிரித்தெடுத்த பகுதி அல்லது எதனினதும் சுருக்கம் எதனையேனும்,

(ஆ) எந்த நடவடிக்கையினை வெளியிடுதல் பாராளுமன்றத்தினால் அதிகாரமளிக்கப்பட்டதாக உள்ளதோ அந்த நடவடிக்கையொன்றாக இருக்கும் பாராளுமன்றத்தின் நடவடிக்கைகள் எவற்றினதும் நியாயமானதும் சரியானதுமான அறிக்கையினை,

எவரேனும் ஆள் அல்லது அவரது சேவையாளர் நன்னோக்கத்துடனும் வன்மமின்றியும் வெளியிட்டதற்காக, அல்லது வெளியிட்ட காரணத்துக்காக அல்லது வெளியிட்டது தொடர்பாக அத்தகைய ஆள் எவையேனும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளுக்கு ஆளானவராகமாட்டார்.

(3) இப்பிரிவின் நோக்கத்திற்காக, "குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள்" என்ற சொல்லமைப்பு, உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின், மேல் நீதிமன்றத்தின், அல்லது வேறு ஏதேனும் நீதிமன்றத்தின், நியாயசபையின் அல்லது நிறுவனத்தின் அவமதிப்புத் தவறைத் தண்டிப்பதற்கான ஏதேனும் வழக்கு நடவடிக்கையையும் உள்ளடக்கும்'.